1978 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சாத்தனூர் அணைக்கட்டு பகுதியில் 85 என். எம். ஆர். கள் பணிபுரிகிறார்கள். 10 ஆண்டுகளுக்கு மேல் ஆனவர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும் என்ற அரசாணையின்படி 12 பேர்கள் நிரந்தரம் ஆக்கப்பட்டார்கள். மீதி உள்ள 73 பேர்களில் 1-4-1977 முடிய 10 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் யார் என்ற பட்டியல் கேட்கப்பட்டிருக்கிறது. அது கிடைத்த உடன் அதையும் அரசு ஏற்றுக்கொள்ளும்.

சின்கோனா தொழிலாளர்களுக்கு கூட்டுறவு பண்டகசாலை

*818 வினா திரு. கு. ரமணி: மாண்புமிகு உணவு - கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசு சின்கோனா துறை தொழிலாளர்களுக்கு கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்திக் கொடுக்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது?

(இ) உணவுப்பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பண்டங்களை அவர்களுக்கு விநியோகிக்க தற்போது என்ன ஏற்பாடு உள்ளது?

மாண்புமிகு திரு. க. உ. ரொ. எட்மண்ட்:-(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) நீலகிரி கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி, மற்றும் உதகமண்டலம் கூட்டுறவுப் பண்டகசாலையினரால் நீலகிரி மாவட்டத்தில் நடத்தப்படும் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. நடுவட்டத்திலும், ஏனைய கிராமங்களிலும் இப்பண்டகசாலைகளின் கிளைகள் இருக்கின்றன. சின்கோனாத் துறையின் அலுவலர்களும், தொழிலாளர்களும் இவ்விரு பண்டகசாலைகளின் கிளைகளிலிருந்து தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்கின்றனர்.

மதுக்கரை கூட்டுறவு பண்டகசாலை

*819 வினா திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், மதுக்கரை கூட்டுறவு பண்டகசாலை கலைக்கப்பட காரணம் என்ன?

(ஆ) ஏராளமான தொகை ஊழல் செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(இ) உறுப்பினர் பங்குத் தொகையினை திருப்பித்தர அரசு உத்திரவு போட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. உ.ரா. எட்மண்ட்

(அ) பண்டகசாலை கலைக்கப்பட காரணங்கள் கீழ்வருமாறு;

(1) சங்கம் 5 ஆண்டுகளுக்கு மேலாக சரியான முறையில் செயல்படவில்லை.

(2) 30-6-1973 தேதி அன்று நட்டத்தில் இயங்கி வந்தது.

(3) 1973-74, 1974-75 ஆண்டுகளில் பண்டகசாலையின் நிர்வாகக் குழு கூடி நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவில்லை.

(4) சங்கத்தின் நிதிநிலை திருப்திகரமாக இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இல்லை.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கூட்டுறவுப் பண்டகசாலையில் ஏராளமான தவறுகள் நடைபெற்றதாக மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை உறுப்பினர்களுடைய பங்கீட்டுத் தொகை திரும்பக் கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உ.ரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட புகார்கள் இன்னும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வரவில்லை. பங்கீட்டுத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான யோசனை இப்போது நிதிநிலையைப் பொருத்தமட்டில் இல்லை.

விவசாயக் கடன்களுக்கான வட்டி விகிதம்

*820 வினா திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) விவசாயக் காரியங்களுக்கு கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கும் கடனுக்கு ரிசர்வ் வங்கி விதிக்கும் வட்டி விகிதம் என்ன?

(ஆ) விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளுக்கு குறுகிய காலக் கடனுக்கும் மத்தியகாலக் கடனுக்கும் செலுத்தும் வட்டி விகிதம் என்ன?